பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இணை நூலகம்

Registered as a Newspaper    பக்கங்கள் 8    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

The Eelanaatham    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 5    திருவள்ளுவர் ஆண்டு 2025    வைகாசி 22    05- 06 - 1994    ஞாயிற்றுக்கிழமை    ஓசை 107

## தியாகி பொன். சிவகுமாரனின் 20-ம் ஆண்டு நினைவு நாள் இன்று

தியாகி பொன். சிவகுமாரனின் 20-ம் ஆண்டு நினைவு நாள் கூட்டம் இன்று மாலை 5.00 மணிக்கு உரும்பராயிலுள்ள தியாகி சிவகுமாரன் நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் ஈகச்சுடரேற்றல் தேசியக்கொடி ஏற்றல் என்பவற்றை அடுத்து நினைவாலயத்தில் உள்ள தியாகி சிவகுமாரனின் நினைவுருவச் சிலைக்கும் திரு உருவப்படத்திற்கும் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்படும். அதனையடுத்து கருத்துரைகளும், கலை பண்பாட்டுக்கழகத்தினரின் 'சதியை வென்ற சாவுகள்' மாவீரர் வணக்க நடனம் என்பனவும் இடம்பெறவுள்ளன.

# எமது இனத்தின் எதிர்காலம் மாணவர் சமுதாயத்தினுடையதே; சமூகத்திற்கு பயன்பாடு உடையவர்களாய் அவர்கள் ஆகவேண்டும்

## மாணவர் எழுச்சி நாள் குறித்து மாணவர் அமைப்பு விடுத்த அறிக்கை

[யாழ்ப்பாணம்]

இடைவிடாது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற போராட்ட சூழலில் இருந்து கொண்டு, தமக்கெதிரான தடைகளையும் இடர்களையும் எதிர்கொண்டுவரும் தமிழீழ மாணவர்கள், தமது இனம், மொழி, நாடு பெரும் நெருக்கடிகளைஎதிர்கொண்டு வரும் நிலையில் அந்நெருக்கடிகளை தகர்த்தெறிவதற்கான விடுதலைப் போராட்டம் வீறோடு நடைபெற்றுக்கொண்டிருக்கையில் அப்போராட்டத்துக்குத் துணையாக தம்மாலான பங்களிப்பைச் செய்ய வேண்டியது மாணவர்களது தலையான கடமையாகும். ஏனெனில் எதிர்காலம் மாணவர் சமுதாயத்தினுடையதே; இன்று நாம் எதிர் நோக்கும் தாக்கங்களையோ விடுதலையின் விளைவுகளையோ நாளை ஏற்க இருப்பவர்கள் இன்றைய இளைஞர்களும் மாணவர்களுமே.

இவ்வாறு மாணவர் எழுச்சி நாளைமுன்னிட்டு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையினை இங்கு தருகின்றோம்.

தொழிலாளர் நாள், ஆசிரியர் நாள் போன்று மாணவர் நாளும் கொண்டாடப்பட வேண்டும் என்று கல்விச் சமூகத்தில் ஏற்பட்டவிருப்பினடிப் படையில், ஜூன் -5 மாணவர் எழுச்சி நாளாகக் குறிக்கப் பட்டு இந்த ஆண்டிலிருந்து கொண்டாடப்படுகிறது.

உலக சமுதாயத்தில் துடிப்பாகச் செயற்படக் கூடியவர்களில் பெரும் பகுதியினர் மாணவர்களே. உலகில் நடைபெற்ற, நடைபெற்று வருகின்ற மாற்றங்கள், புரட்சிகள், வளர்ச்சிகள் என்பவற்றில் எல்லாம் பெரும் பங்கு வகித்தவர்கள் மாணாக்கர்களே.

உலகில் நடைபெற்று வந்த, நடைபெற்றுவருகின்ற தேசிய விடுதலைப் போராட்டங்கள் புரட்சிகளிலெல்லாம் முகிழ்த்தெழவும், வீறு கொள்ளவும் வைத்தவர்களில் முதன்மையானவர்கள் மாணவர்களே. மாணாக்கர் வலு என்பது உலகில் ஆற்றல் மிக்க வலு என்பது எல்லோராலும் உணரப்பட்டவையே;

எதிர்காலத்தில் வர இருக்கின்ற மாற்றங்கள், வளர்ச்சிகளை பெரிதும் எதிர் நோக்க இருப்பவர்களும் அவர்களே. மாணாக்கர்களது பங்களிப்பின்றி உலகில் விடுதலைப் போராட்டங்கள், புரட்சிகள், மாற்றங்கள் ஏற்பட்டதாக வரலாறில்லை.

எமது சமுதாய ஏற்றத்தின் தூண்களாக விளங்கப் போகின்ற தமிழீழ மாணாக்கரின் அடித்தளத்தையே தகர்த்து வலுவிழக்கச் செய்வதைக் குறிக்கோளாகக்கொண்டு சிங்கள அரசு திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றது.

- தமிழ் மாணவர்களின் உயர் கல்வியை மட்டுப் படுத்திய தரப்படுத்தல்,
- காலந்தாழ்த்தி வழங்கப் பட்டு வரும் இலவசப் பாடநூல்கள்,
- தமிழ்மாணவர்களது தன் நம்பிக்கையையும், விடுதலை உணர்வையும் மழுங்கடிக்கும் வகையில் உண்மைக்குப் புறம்பாக, தமிழர் வரலாற்றுப் பெருமைகளை மூடி மறைத்து சிங்களவர் வரலாற்றை மிகைப்படுத்திய பாடநூல்கள்,
- நிதி ஒதுக்கீடுகளில் தொடர்ந்து வரும், தமிழ்ப்பகுதிக்கான புறக்கணிப்புகள்
- ஆசிரியர் அமைத்தல்களில் (நியமனங்கள்), பாடசாலை உபகரணங்கள் வழங்குவதில் தமிழ்ப் பகுதிகளுக்கு

(5 ஆம் பக்கம் பார்க்க)

# சந்திரிகாவை மக்கள் விரும்பின் விட்டுக்கொடுக்க நான் தயார்

## மணலாற்று தாக்குதலில் சிப்பாய் ஒருவர் பலி

### மேலும் இருவர் காயம்

(கொழும்பு)

மணலாற்றுக்கு வடக்கே நேற்று ரோந்துசென்ற படையினர்மீது விடுதலைப் புலிகள் நடத்திய வெடிகுண்டுத் தாக்குதலுக்கு சிப்பாய் ஒருவர் வர் பலியானார். வேறு இருவர் காயமடைந்தனர்.

படையினரின் ரோந்து அணிமீது புலிகள் 60 எம்.எம் மோட்டார் மற்றும் சிறியரக ஆயுதங்கள் கொண்டும் தாக்குதல் நடத்தியதாக இராணுவப் பேச்சாளர் கொழும்பில் தெரிவித்தார்.

## ஜனாதிபதி வேட்பாளர் குறித்து சிறிமாவோ



[கொழும்பு]

பெரும்பான்மை மக்களின் விருப்பம் அதுவானால் ஜனா

## காலை தேசியக்கொடி ஏற்றலுடன் மாணவர் எழுச்சி நாள் ஆரம்பம்

[கொழும்பு]

**பெரும்பான்மை மக்களின் விருப்பம் அதுவானால் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட சந்திரிகா குமாரணதுங்கவிற்கு விட்டுக்கொடுக்க தாம் தயாராக இருப்பதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார். ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது தொடர்பாக மக்கள் மத்தியில் குழப்பம் எதுவும் தேவையில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.**



மக்களின் விருப்பத்திற்கமைய நடந்துகொள்ள தான் தயாராக இருப்பதாக கட்சி உறுப்பினர்கள் மத்தியில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய பத்திரிகை ஒன்றின் மூலம் இன்று செய்தி ஒன்றை வெளிடவிருக்கும் சிறிமாவோ பண்டாரநாயக்க இவ்வாறான ஒரு அறிவித்தலை அதற்கு முன்னதாக வெளியிடவேண்டி வந்ததற்கு ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக மக்கள் மத்தியில் எழுந்த எதிர்ப்பே காரணம் என 'ராவய' ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்தார்.

# ஜனாதிபதி வேட்பாளர் சந்திரிகா !
# பெரும்பாலும் உறுதியாகிவிட்டது
## கொழும்பில் அரசியல் அவதானிகள் தெரிவிப்பு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சந்திரிகா குமாரணதுங்கா என்பது மிகவும் தெளிவாக உறுதியாகி விட்டதாக ராவய ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார். இதனைத் தொடர்ந்துபொது ஜன ஐக்கிய முன்னணி மீண்டும் தனது அரசியல் நடவடிக்கைகளில் களை கட்டத் தொடங்கி விட்டதை அவதானிக்க கூடியதாக இருப்பதாக அவர் சுட்டிக் காட்டினார்.

தொடர்ந்து அவர் கருத்து, தெரிவிக்கையில் அரசாங்கம் தமது நிவாரணம் சலுகைகள், மற்றும் அபிவிருத்தி என்ற போர்வையில் செய்யும் தேர்தல் பிரசாரத்திற்கு சிறிமாவோ பண்டாரநாயக்காவினால் முகம் கொடுக்க முடியாது என்றும் சந்திரிகா குமாரணதுங்காவினால் மட்டுமே இதற்கு முகம் கொடுக்க முடியும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.



# வடக்கு-கிழக்கு இணைப்பு விடயத்தில்
# தமிழ்-முஸ்லிம் குழுக்கள் இணக்கம்
## முஸ்லிம்களுக்கு உப பிரதேச சபைகளாம்

(கொழும்பு)

வடக்கும் கிழக்கும் இணைந்த பிராந்திய சபைகளில் வடக்கு கிழக்கின் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாக கொண்ட பிரதேச சபைகளை உள்ளடக்கி உப பிரதேச சபையை உருவாக்கும் யோசனைக்கு கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களும் முஸ்லிம் கட்சிகளும் இணங்கியுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டும் வடக்கு-கிழக்கு இணைப்பினால் உருவாகக்கூடிய பிரச்சினைகள் குறித்தும் ஆராயும் பொருட்டு கூடிய இக் குழுவினர் இவ்வாறான யோசனையொன்றுக்கு இணங்கியுள்ளனர்.

இந்தியாவின் பாண்டிச்சேரி யூனியன் பிரதேசம் போன்று இது அமையும் என தெரிவிக்கப்படுகிறது.

முஸ்லிம்களைப் பெரும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தொடர்ந்து மூடப்பட்டிருக்கும்

குடும்ப அட்டைப் பகுதிச் செயலகங்கள் அனைத்தும் எதிர்வரும் 20-06 94 வரை மூடப்பட்டிருக்கும் என்பதை பொது மக்களின் கவனத்திற்கு குடும்ப அட்டைப் பகுதியினர் அறியத்தருகின்றனர்.

## கலந்துரையாடல்

தென்மராட்சிக் கோட்டத்திற்குட்பட்ட அனைத்து வர்த்தகர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 7 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சிக் கோட்டத்திற்குட்பட்ட அனைத்துக் கோயில் நிர்வாக சபையினர் விளையாட்டுக் கழக, ச.ச. நிலைய நிர்வாக சபையினர், தொழிற்சங்க நிர்வாக சபையினர் ஆகியோருக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 7 ஆம் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடல்களில் சகலரையும் தவறாது கலந்து கொள்ளும்படி யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

# மாணவர் எழுச்சி நாள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாணவர் எழுச்சி நாள் இன்று பெரியளவில், எழுச்சியுடன் அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பாடசாலை மட்டத்தில் காலை நிகழ்ச்சிகளும் கோட்ட மட்டத்தில் மாலை நிகழ்ச்சிகளும் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இன்று காலை 8.30 மணிக்கு தேசியக்கொடி ஏற்றலுடன் எழுச்சி நாள் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு குடாநாட்டின் சகல பகுதிகளிலும் உணர்வு பூர்வமான வசனங்களும், பதாகைகளும், சுவரொட்டிகளும் காணப்படுகின்றன.

மாணவர் சமுதாயத்தை சமூகத்திற்கு ஏற்றவகையில் உருவாக்குவதற்கும் மாணவர் மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் ஏற்றவகையில் இம் மாணவர் எழுச்சி நாள் அனுஷ்டிக்கப் படவுள்ளது.

யாழ். குடாநாடெங்கும் எழுச்சியுடன் இந் நிகழ்வு நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதேவேளை வன்னிப் பகுதியிலும் இந்த எழுச்சி நாள் பெரியளவில் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. (தி)

# யாழ். அரச அதிபரின் பதிலில்
# கூட்டுறவு சபைக்கு திருப்தியில்லை

[யாழ்ப்பாணம்]

கடந்த நான்கு வருட காலமாக யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பிரச்சினைகள் பல யாழ். செயலக நிர்வாகத்தினால் தீர்த்து வைக்கப்படாமல் இருப்பதினால் கூட்டுறவுச் சங்கங்கள் பல நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது என்றும், இது சம்பந்தமாக யாழ். அரச அதிபரிடம் கையளித்த கோரிக்கைகளுக்குசாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை என்றும் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை தெரிவித்துள்ளது

கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக கடந்த பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் எடுக்கப்பட்ட சில தீர்மானங்கள் கூட்டுறவுச் சபையால் யாழ். அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகரிடம் கையளிக்கப்பட்டன.

இதற்கு யாழ். அரச அதிபரினால் அனுப்பி வைக்கப்பட்ட பதில் கூட்டுறவுச் சபையின் கோரிக்கைகளுக்கும் எதிர்பார்ப்பிற்கும் சாதகமானவையாக இல்லாததோடு, முரணான அம்சங்களைக் கொண்டிருப்பதாக கூட்டுறவுச்சபை தெரிவித்துள்ளது.

இதனை அடுத்து கூட்டுறவுச் சபையால் யாழ். அரச அதிபருக்கு மீண்டும் சில கோரிக்கைகளை வலியுறுத்தி பதில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அதில், பிரதேச செயலரின் அனுமதியுடன் இருவாரகடன் வழங்கல், மண்ணெண்ணெய்க்கான போக்கு வரத்துக் கூலி, 93 செப்ரெம்பர் மாதத்திலிருந்து வழங்குவது எனத் தீர்மானித்து, அறிக்கையில் 94 மாசியில் இருந்து வழங்குவது எனக் குறிக்கப்பட்டுள்ளது, யாழ் மாவட்டத்திற்கு தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களின் கையிருப்பும், விநியோகத்தில் சீரான நடைமுறை பின்பற்றப்படாமை, வர்த்தகத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# காமினி ஜெயவிக்கிரமவும்
# பாராளுமன்றம் செல்வார்?

(கொழும்பு)

வடமேல் மாகாணசபை எதிர்க்கட்சி தலைவர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா முன்னாள் நிதி அமைச்சர் றொனி டி மெல் ஆகியோர் விரைவில் பாராளுமன்றத்தில் பிரவேசிக்க இருப்பதாக தெரியவருகின்றது.

ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட அதிகாரிகளை மேற்கோள் காட்டி அரசியல் அவதானிகள் மேற்படி கருத்தைத் தெரிவித்துள்ளனர்.

# மேலும் ஒரு உறுப்பினர்
# பதவி விலக தயாராகிறார்

[கொழும்பு]

தேசிய பட்டியல் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஐக்கிய தேசிய கட்சியின் மேலும் ஓர் உறுப்பினர் தனது பதவியை இராஜினாமா செய்ய இருப்பதாக ஜனாதிபதிக்கு உறுதியளித்துள்ளார்.

பறங்கி இனத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் எலைச் றோபசன் என்பவரே இவ்வாறு தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வதாகவும் இது தொடர்பான தனது இராஜினாமா கடிதத்தின் பிரதியை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவிடம் நேற்று ஜனாதிபதி மாளிகையில் சந்தித்து வழங்கியுள்ளார் எனவும் தெரியவருகிறது

(5 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### இறைச்சிக் கோழி

புறொயிலர், இறைச்சிக் கோழி சனி, ஞாயிறு தினங்களில் காலை 8.00 மணி முதல் 11.00 மணிவரை சுத்தம் செய்து கொடுக்கப்படும். (வெலிங்டன் சந்தி) 382, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (8466)

### சாரதா

கலை இலக்கிய சஞ்சிகை அடுத்த இதழ் கோமல் சுவாதன் பேட்டியுடன் இலங்கைச் சிறப்பிதழ். எல்லாக் கடைகளிலும் விற்பனையாகிறது (8472)

### காணி விற்பனைக்கு

சாவகச்சேரி கண்டி வீதியில் சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு முன்பாக உள்ள 2½ பரப்புக் காணி (சதுரவடிவம்) உடன் விற்பனைக்கு உண்டு தொடர்புகட்கு: நாதன்ஸ் சுவ்பார் சங்கத்தானை, சாவகச்சேரி. (8464)

### சைனா மகசின்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம் விபரங்களுக்கு வசந்தம் புத்தக நிலையம் புதிய பஸ் நிலையம் முன் யாழ்ப்பாணம் (8457)

### விற்பனைக்குண்டு

நல்லினக் கறுப்பு அல்சேஷன் நாய்க்குட்டிகள் அத்துடன் இறைச்சிக் கோழிகள், விறாத்துக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு; 698/15, சபாபதி வீதி, தலையாழி (வைரவர் கோவிலடி, யாழ்ப்பாணம்) (8462)

### சேவல் குஞ்சுகள் விற்பனை

2 கிழமை வளர்ச்சியடைந்த பிறவுண் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. 'மல்லிகாபதி' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (8452)

---

கொய்யாத்தோட்டம் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின்

## 3வது ஆண்டு நிறைவுவிழா -1994

### மென்பந்து சுற்றுப் போட்டி

1 பேர் 2 ஓவர்கள்

விண்ணப்பக் கட்டணம் 100/-

விண்ணப்ப முடிவுத் திகதி :- 20 - 6 - 94

தொடர்புகள் :- J. ரவீந்திரன்

கொ. ச. க.நி முன்பாக கலைச்சுடர் ச.ச. நி

(8479)

---

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



03 09-1969 இல்
தமிழ்த் தாய்க்கு
மகனானான்

05-06-1989 இல்
தமிழ் மண்ணுக்கு
மைந்தனானான்

### லெப்டினன்ட் குட்டி

(துரைரத்தினம் சிவனேசன்)

தமிழீழ மீட்புக்கென்றே தன்
தலைவன் வழி நின்ற தம்பி
தமிழன் இவன் என்று காட்டி
மறவன் ஆனவன் இந்தக் குட்டி.
புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? இது பழமொழி
புலியானவன் பூனை ஆவானோ?
விடிவு விடுதலை வாழ்வு இது ஒன்றே
தமிழன் தாரக மந்திரம் இதை ஒடுக்க
எப்படை வந்தாலும் புலிப்படை வெல்லும்;
வாதரவத்தை கட்டைக்காட்டில் இந்திய
இராணுவத்துடன்
நேரடி மோதல் வீரச்சாவு சுதந்திர தாகத்தால்
துடித்துத் திரிகிறது இந்தச் சின்னவனின் ஆத்மா
இன்னும் வருவது வரட்டும்
தமிழன் விடுதலைப் பள்ளுப்பாடி ஆடும் நாள்
எந்நாளோ
அன்று இவனது ஆத்மா சாந்திபெறும் இன்னும்
ஏராளம்
அது மிக விரைவில்...... மிக விரைவில்......

குடும்பத்தினர்

நவக்கிரி, புத்தூர். (8450)

---

## நினைவு கூருகின்றோம்...

### 05.06.1994

1974ம் ஆண்டு இதே தினத்தில் யாழ் - கோப்பாயில் சிறிலங்கா காவல்துறையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது முதன்முதலாக சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**சிவகுமாரன்** [பொன்னுத்துரை சிவகுமாரன்-உரும்பராய் யாழ்]

1985-ம் ஆண்டு திருமலை-மூதூர்ப் பகுதியில் சிறிலங்காப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 70 தமிழர்கள்.

தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 02 தமிழர்கள்

1987-ம் ஆண்டு வீரச்சாவெய்திய,

❋ **தவராசா தவேந்திரன்** [ஏறாவூர் மட்டு]

திருமலையில்-தம்பலகமம், 13-ம் கட்டை முகாம்களைச் சேர்ந்த சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாமில் சுட்டுக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்ட 20 தமிழர்கள்,

பூசா தடுப்பு முகாமில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 07 தமிழர்கள்,

யாழ்-பருத்தித்துறை அல்வாய்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது படுகொலை செய்யப்பட்ட 08 குழந்தைகள், 5 பெண்கள் உட்பட 22 தமிழர்கள்.

1988-ம் ஆண்டு கிளி-பரந்தனில் தேசவிரோத சக்திகளுடனான சமரின்போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**ஜோனேஸ்** [ஆறுமுகம் ஜோனேஸ்வரன்-புளியம்பொக்கணை கிளிநொச்சி]

1989-ம் ஆண்டு யாழ் புத்தூர், கண்டிக்காட்டுப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது வீரச்சாவெய்திய,

**கப்டன் நேரு** (செ. இளையப்பா ஜீவகுமார்-கதிரிப்பாய், அச்சுவேலி-யாழ்)

**லெப்.குட்டி** (துரைரட்ணம் சிவனேசன்-நவக்கிரி, புத்தூர் யாழ்)

இதே நடவடிக்கையின் போது இந்தியப்படையினரால் சுடப்பட்டும் உயிரோடும் எரிக்கப்பட்டு கொல்லப்பட்ட 09 தமிழர்கள்,

யாழ்-கொடிகாமம் வரணியில் இந்தியப்படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**லெப் சங்கிலி** (சங்கரப்பிள்ளை மகேந்திரலிங்கம்-மயிலிட்டிவடக்கு-யாழ்)

**2-ம் லெப் கர்ணன்** (சருணானந்தம்-அச்செழு, நீர்வேலி யாழ்)

**உமைநேசன்-சாம்** (பெனான்டோ அன்ரனிசாம் போல்-பழையவாய்க்கால், மிருசுவில் யாழ்)

**ஆசாத்** [பரீத் ஆசிர்-சிவன்கோயிலடி, சாவகச்சேரி-யாழ்)

யாழ்-சாவகச்சேரி-மட்டுவில் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**மாலன்** (சின்னத்தம்பி கலாராஜன்-மட்டுவில் வடக்கு சாவகச்சேரி யாழ்)

மானிப்பாய், கட்டுடைப் பகுதியில் இந்தியப்படையினரால் சுடப்பட்டு பலியான ஆதரவாளரான,

பரமேஸ்வரன் முரளிதரன்-கட்டுடை-மானிப்பாய்)

1991-ம் ஆண்டு மட்டு-கொம்மாந்துறைப்பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினரால் வந்தாறுமூலைச் சந்தியில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்

கிளிநொச்சி-இந்து மகாவித்தியாலயத்தின் மீது சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலின் போது அருகில் இருவீடுகள் சேதமுற்றதில் கொல்லப்பட்ட ஜெயந்திநகரைச் சேர்ந்த இளம்தாய் மகள் உட்பட 02 பேர்.

### ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்


❋ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-9595)

---

## 5ம் ஆண்டு நினைவலைகள்

| பிறப்பு: | | வீரச்சாவு: |
|---|---|---|
| 14 | | 05 |
| — |  | — |
| 08 | | 06 |
| — | | — |
| 1967 | | 1989 |

### கப்டன் நேரு

### இளையப்பா ஜீவகுமார்

கதிரிப்பாய் அச்சுவேலி

மாறாத பாசத்திற்குரியவனே!
விடுதலை என்பது கடையிலே வாங்கும் பொருளல்ல
என்றாய்
தியாகங்களும், பெரும் அர்ப்பணிப்புகளும்
நிறைந்திட வேண்டும் அதற்கு என்றாய்
மக்களே மகத்தான சக்தியும் என்றாய்
மக்களின் மனங்களின் நீக்கமின்றி நிறைந்தாய்
வற்றாத கண்ணீர் வெள்ளம் பெருக்கெடுத்துப்
பாய்ந்தது
வாடிய பயிராய் கிடந்தனர் மக்கள் உன்
வீரச்சாவு கேட்டு.
இன்று ஐந்தாவது ஆண்டிலும் அதே நிலை உண்டு
காலங்கள் நீளும் உன் கோலங்களும் நின்று வாழும்.

- குடும்பத்தினர்.

(8480)

---

# மாணவர் எழுச்சி நாள்

# மாணவர் எழுச்சி நாள்

## யூன் - 5

முளைத்திடும் முனைப்பொடு மாணவச்சோலை
முளைத்ததும் நிழல்தரும் வெயிலிலே நாளை!
மாணவர் எழுச்சி நாள் சிறக்க வாழ்த்துகின்றோம்.

★ **மருந்து பால்மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது**

484, கேணல் இட்டு சாலை, யாழ்ப்பாணம்.
ஊறணி, வல்வெட்டித்துறை.

★ **சஞ்சீவகரணி மருந்தகம்**

சங்கரத்தைச் சந்தி, சித்தன்கேணி.

★ **வில்லியம் ஹாவே தனியார் மருத்துவமனை**

இல. 7, கண்டிவீதி, சுண்டிக்குளி.

★ **பல் வைத்திய நிலையமும் வைத்திய ஆலோசனைகளும்**

484, கேணல் கிட்டுசாலை, யாழ்ப்பாணம்.

(சி-9599)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
நல்லூர் இளை நூலகம்

# யாழ். ரசிகர்களை உணர்ச்சி மயமாக்கிய இரு பரபரப்பான கிரிக்கெட் போட்டிகள்

இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறும் கழகக் கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் எல்லாம் அனேகமாக மட்டுப்படுத்தப்பட்ட பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட சுற்றுப் போட்டிகளாகும். இவ்வகையில் தற்போது 'ஜொலிஸ்ரார்' கிண்ணத்துக்காக 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட 9வது சுற்றுப் போட்டி யாழ் இந்து மைதானத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது பொதுவாகவே மட்டுப்படுத்தப்பட்ட பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட போட்டிகள் அதன் பரபரப்பு விறுவிறுப்பு என்பனவற்றுக்காகவே மிகவும் பிரபல்யமடைந்து விளங்குகின்றன. இந்த வகையில் 'ஜொலிஸ்ரார்' கிண்ணத்துக்காக நடைபெற்ற சாப்ரா, பல்கலைக்கழகம் இரண்டும் கலந்துகொண்ட கால்இறுதியாட்டமும், சென்றலைட்ஸ், பல்கலைக்கழகம் இரண்டும்கலந்துகொண்ட அரை இறுதி ஆட்டமொன்றும் மிகப் பரபரப்பை ஏற்படுத்தி ஆரோக்கியமான வ தப்பிரதிவாதங்களையும் ஏற்படுத்தியுள்ளது

யாழ் இந்துக் கல்லூரி மைதானம் அளவில் சிறியதாக இருப்பினும் 30 பந்துப் பரிமாற்றங்களில் 200க்கும் மேற்பட்ட ஓட்டங்களைக் குவிப்பதென்பது இலகுவானதல்ல. அதேபோல 200க்கு மேற்பட்ட எண்ணிக்கையை எட்டிப் பிடிப்பதும் இலகுவானதல்ல ஆனால் இவ்விரண்டுமே யாழ் பல்கலைக்கழக சாப்ரா ஆட்டத்தில் நடைபெற்றன. முதலில் துடுப்பெடுத்தாடிய சாப்ரா 214/7 என்றவாறாக 30 பந்து

> ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்திய மட்டுப்படுத்தப்பட்ட பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் சில போட்டிகள் ரசிகர்களை உணர்ச்சியின் உச்சக்கட்டத்திற்குக் கொண்டுசென்றன

பரிமாற்றங்களை நிறைவு செய்து கொண்டது மூன்றாவது ஆட்டக்காரரை சாப்ரா இழக்கும்வரை ஆட்டம் சாதாரணமாகத்தான் இருந்தது அதனைத் தொடர்ந்து ஜெயகாந்தன் மைதானத்தினுள் நுழைந்தார். அவர் ஒரு புயலாக மாறி ஏறத்தாழ ஐந்து பந்துப்பரிமாற்றங்களில் 60 ஓட்டங்களைக் குவித்தார் மின்னல் வேகத்தில் களத்தின் நாலாபுறமும் பந்து பறந்ததென்று கூறலாம். ஆறுகள் ஏழுமுறையும் நான்குகள் மூன்றுமுறையும் கொண்ட ஒரு அதிரடி ஜெயகாந்தனால் நிகழ்த்தப்பட்டது. இதனை நீண்டகாலமாக யாழ்ப்பாண ரசிகர்கள் மறக்க மாட்டார்கள் இறுதியில் சுதேசனின் விவேகமான பந்து வீச்சால் ஜெயகாந்தன் ஆட்டமிழந்தாலும் அவருடைய ஆட்டம் லாவகமானதாகவும் மட்டுப்படுத்தப்பட்ட பந்துப்பரிமாற்றத்திற்குரிய பாணியாகவும் அமைந்திருந்தது என்பது ரசிகர்களின் ஏகோபித்த கருத்தாகும். ஜெயகாந்தன் ஓட்டங்களைக் குவித்த வேகமானது இறுதிவரையில் சாப்ராவின் ஓட்டவேகத்தைச் சராசரியாகவோ அதற்குக் கீழாகவோ கொண்டுவர முடியாத நிலையை பல்கலைக்கழக அணிக்கு ஏற்படுத்தியது.

இவருடன் இணைந்தாடிய மகேந்திரன் 2 ஆறுகள், 6நான்குகள் கொண்ட அரைச் சதத்தைப் பெற்றுக் கொண்டார். ராஜ்குமார் தம் பங்குக்கு

பெற்றுக் கொண்டது சிறந்த சராசரியாகவே கருதப்பட்டது

பல்கலைக்கழக அணி தன்ஆட்டத்தைத்திடமாக ஆரம்பித்தது எனக் கூறமுடியாது சராசரி 7 ஓட்டங்கள்பெறவேண்டிய நிலையில் 3இலக்குகளை இழந்த நிலையில் 37ஓட்டங்களை மட்டும் பெற்றிருந்த வேளை, ஆட்டம் வெகுவாக சாப்ரா பக்கம் சாய்ந்தது போன்று இருந்தது; அதன் பின்னர் சிவசுதனின் பொறுப்பு நிறைந்த ஆட்டம் அதோடு விவேகானந்தன், ராஜா, பத்மநாதன், நரேஷ் ஆகியோரின் பங்களிப்போடு திடமாக ஆனால் மெல்ல மெல்ல பல்கலைக்கழகம் இலக்கை நோக்கி நகரலாயிற்று ஜெயகாந்தன், நாதன், ராஜ்குமார் ஆகியோரின் பந்து வீச்சுக்கு முகம் கொடுப்பது பல்கலைக்கழக அணியினருக்கு அவ்வளவு இலகுவானதாக இருக்கவில்லை.

15-வது பந்துப் பரிமாற்றத்தின் போது பல்கலைக்கழக அணி 112 ஓட்டங்களைப் பெற வேண்டிய நிலையில் 6 இலக்குகளையும் இழந்திருந்தது. இதன் பின்னர் சராசரியாக 8 ஓட்டங்கள் எடுத்தாக வேண்டிய நிலைக்கு அணியினர் தள்ளப்பட்டனர். பத்துப் பந்துப் பரிமாற்றங்கள் இருக்கும் போது ஏறத்தாழ சராசரியாக பத்து ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலைக்கு ஆளாகினர். ஐந்து பந்துப் பரிமாற்றங்கள் இருக்கும் போது இரண்டு இலக்குகள் மட்டுமே எஞ்சிய நிலையில் 40ஓட்டங்களைப் பெறவேண்டியிருந்தது.

8-வது இலக்குச் சரிந்து சிறீதரன் களத்தில் நுழையும் வரை பல்கலைக்கழக அணி வெற்றி குறித்த நம்பிக்கையொன்றைப் பெற்றிருக்க முடியாது அதேபோல சாப்ரா முடிவு வேறு விதமாக அமையும் என்றும் நினைத்திருக்க முடியாது. சிறீதரன் அடித்த இரண்டு ஆறுகள் பல்கலைக்கழக அணியின் சுமையை ஓரளவு குறைத்தது.

ஆனால் சிறீதரன் ரண் அவுட் முறையில் ஆட்டமிழந்த போது முடிவு மீண்டும் ஊசலாடலாயிற்று. எனினும் நாதன் அணியின் 29 வது பந்துப் பரிமாற்றத்தை வீச வந்து டானியல் அவரை எதிர்கொண்ட போது நிலைமை தலைகீழாயிற்று நாதனும் தன் ஓட்டத் தூரத்தையும் வீச்சு வேகத்தையும் பற்றிக் கவலைப்பட்டாரே ஒழிய வேறு நுட்பங்களைக் கையாள்வது பற்றிக்கவலைப்பட்டதாகத் தெரியவில்லை டானியல் அற்புதமாக இந்தப் பந்து பரிமாற்றத்தில் (4 ம் 5-ம் பந்துகள்) அடித்த இரண்டு ஆறுகள் முடிவை நிச்சயித்தன அவர் பெரும் அழுத்தத்தின் மத்தியில் இவ்விரண்டு ஆறுகளையும் அடித்தார். அதன் பின்னர் இறுதிப் பந்துப் பரிமாற்றத்தின் 4-வது பந்தினை நோபின் லாவகமாக ஆடி நான்கு ஓட்டங்கள் பெற்றதும் பல்கலைக்கழகம் சாத்தியமற்றதென்று எண்ணிய வெற்றியைச் சாத்தியமாக்கிக் கொண்டது. இந்த வெற்றிக்கு அச்சாணியாக அமைந்த ராஜா பத்மநாதனின் சிறந்த ஆட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டேயாகவேண்டும். இவர் தன்னை மைதானத்தில் நிலைப்படுத்திக் கொண்டதும், நிதானமும், ஒவ்வொன்றாக ஓட்டங்களைச் சேகரித்த பாங்கும் எல்லோராலும் வெகுவாகப் பாராட்டப்பட்டது.

இரண்டாவது ஆட்டம் சென்றலைட்ஸ் பல்கலைக்கழக அணிகள் மோதிய அரை இறுதி ஆட்டமாகும் இந்த ஆட்டம் மிகப் பரபரப்புடன் எதிர்பார்க்கப்பட்ட ஆட்டமாகும் சென்றலைட்ஸ் தம் ஆட்டத்தை ஆரம்பித்த முறை அதிர்ச்சிக்குரியதாக இருந்தது சுரேந்திரஜித் தான் எதிர்நோக்கிய முதலாவது பந்திலேயே (அணியின் 3-வது பந்து) பெரும் அடியொன்றை அடிக்க முற்பட்டு வீணாக ஆட்டமிழந்தார். ஒரு கட்டத்தில் சதீசும், சாந்திகரனும் ஓட்டங்களை அழகாக வளர்த்தெடுத்துச் சென்றனர். சாந்திகரனின் அனுபவ வெளிப்பாடு ஆட்டம் முழுவதிலும் விரவியிருந்தது எல்லோர் கவனத்தையும் ஈர்த்தது சென்றலைட்ஸ் மத்திய வரிசை வீரர்கள் நீண்ட நேரம் மைதானத்தில் நிலைக்க முடியவில்லை இதற்குக் காரணம் பல்கலைக்கழகப் பந்து வீச்சாளர்களின் திறமை என்பது ஒரு காரணமாயிருக்க குறுகிய வேளையில் அதிரடிமூலம் ஓட்டம் குவிக்க முயன்ற தன்மை இன்னொரு காரணமென்பது மறுக்க இயலாது இந் நிலையில் மொத்தம் 150 ஓட்டங்கள் பெறுவதே இயலாதென்ற நிலையில் 9-வது விக்கெட் 136ல் விழ பிரபாகரன் மைதானத்தினுள் நுழைந்தார்

அன்றைய மனம் நிறைந்த வீரர் பிரபாகரன்தான். இவர் ஆட்டமிழக்காமல் 29 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். இவரும் பேணாட் ரமேசும் 44 ஓட்டங்களை சாதுரியமாகப் பெற்று தமது அணியை 180 ஓட்டங்கள் வரை கொண்டு சென்றமை இவ்வாட்டத்தின் திருப்புமுனையாக அமைந்தது.

பந்துவீச்சில் சிறிதரன் ஆட்ட ஆரம்பத்தை உலுப்பிவிட, மத்திய வரிசையை ராஜா பத்மநாதனும், சுதேசனும் கலகலக்கப் பண்ணிவிட்டார்கள். மூவரும் தலா மூன்று இலக்குகளைப் பெற்றார்கள். ஆனால் இறுதி இரண்டு பந்துப் பரிமாற்றங்களில் எதுவித பொருத்தமும் இல்லாத வியூகத்தை அணித் தலைவரும் பந்து வீச்சாளரும் ஏன் அமைத்தனர் என்பது புரியவில்லை. மேலும் பரவலாக பல்கலைக்கழக அணியினர் தவறவிட்ட 'பிடிகள்' இவர்களுக்குப் பெரும் பாதகமாக அமைந்தது.

பல்கலைக்கழகம் தன் ஆட்டத்தை ஆரம்பித்த போது முடிவை நிர்ணயிப்பது கடினம் என்றே கருதப்பட்டது- எனினும் திலக்ராஜ், விவேகானந்தன் இருவரும் நிலைத்து நின்று ஓட்டங்களை இலகுவாக பெறத் தொடங்கியபோது பல்கலைக்கழகத்தின் வெற்றி வாய்ப்பு குறித்து நம்பிக்கை துளிர் விட்டதாயினும் திலக்ராஜ் தாம் 23 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை ரண் அவுட் முறையில் ஆட்டமிழந்தார். ஆனால் இரண்டாவது ஓட்டம் ஒன்றிற்கு வாய்ப்பிருந்த நிலையில் அந்த ரண் அவுட் ஏற்பட்டிருக்க வேண்டிய அவசியமே இல்லை. சோடி சேர்ந்து ஆடுபவர்கள் மைதானத்தில் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு ஆட வேண்டும். அல்லது ஒருவர் தன்மையை மற்றவர் உணர்ந்து செயற்பட வேண்டும். இவ்விருவரும் இதில் எதனையும் பின்பற்றாமை இவர்களின் அணிக்கே பெரும் பாதகமாயிற்று. இதன் பின் வந்த வீரர்கள், எண்ணிக்கையை அதிகரித்த போதும் ஓட்ட வேகத்தை எட்டத் தவறிவிட்டனர். இதற்கு இன்னொரு காரணம் றஜீவனின் திறமையான பந்துவீச்சாகும். அவர் தனது ஆறு பந்துப் பரிமாற்றங்களிலும் 10 ஓட்டங்களை மட்டுமே கொடுத்தார். திறமையான பந்துவீச்சாளரை எதிர்கொள்ளும்போது அவரை மேலோங்க விடாது. அவரில் ஒரு தளம்பலை ஏற்படுத்த வேண்டும். அதற்கு அதிரடியே வழி இதனை எதிர்பார்க்கப்பட்ட பல்கலை

> கிரிக்கெட் விளையாட்டில் சந்தர்ப்பங்களை தவறவிடுபவர்களுக்கும், வாய்ப்புக்களைப் பயன்படுத்தாதவர்களுக்கும் யாழ். பல்கலைக்கழகம்-சாப்ரா அணி கால் இறுதிப் போட்டியும், சென்றலைற்ஸ் - யாழ்.பல்கலைக் கழகம் அரையிறுதிப் போட்டியும் சிறப்பான படிப்பினையாகும்

வீரர்கள் சரியாகச் செய்யவில்லை. அவர்கள் தம்மை தேவையில்லாமல் ஒடுக்கிக் கொண்டார்கள் சாந்திகரன் பந்து வீசியபோது ஒரு பந்துப் பரிமாற்றத்தில் 2 இலக்குகள் உட்பட 4 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளைச் சரித்தார். 20 பந்துப் பரிமாற்றம் முடிவடைந்தவேளை 77 ஓட்டங்களைப் பெற வேண்டிய சுமை நிறைந்த நிலையில் பல்கலைக்கழக அணியினர் இருந்தார்கள். 25 பந்துப் பரிமாற்றம் முடிவடையும் போது 60 ஓட்டங்களைப் பெற வேண்டிய நிலையில் இருந்தார்கள்.

நரேஷ் 8-வது இலக்கு வீழ்ந்த பின் மைதானத்தில் நுழைந்து 3 முறை நான்குகளை அடித்தபோதும் நிலைமையைச் சீராக்க இயலவில்லை. பின்னர் சிறிதரன் (26 ஓட்டங்கள்) போன்றோர் இதேபோல அடித்து ஆட முனைந்தும் சென்றலைட்சின் எண்ணிக்கையை எட்ட முடியவில்லை. இறுதியில் 8 இலக்கு இழப்பிற்கு 171 ஓட்டங்கள் என்ற நிலையில் வெற்றியை சென்றலைட்சுக்குக் கொடுத்தார்கள்.

ஓட்டங்களைப் பெற வேண்டிய வேளையில் சந்தர்ப்பங்களைப் பின்போட்டு விட்டு காலங் கடந்த நிலையில் ஓட்டங்களைக் குவிக்க முற்பட்டமை பல்கலைக்கழக அணியின் பிழையான அணுகுமுறையாகும். இதேபோல சென்றலைட்சின் பந்துக் காப்பு முறைகள் சிறப்பாக இருந்தமை அவர்களின் வெற்றிக்கு ஒரு காரணமாகும்]

**நிர்மலன்**

கால் இறுதியாட்டத்தில் இரு தரப்பும் 'பிடி'களைத் தவறவிட்டிருந்தாலும் சாப்ரா தவறவிட்ட பிடிகள் தமது வெற்றியைப் பாதித்ததை உணர்ந்திருப்பர்]

அரையிறுதி ஆட்டத்தில் மத்திய வரிசை சென்றலைட்ஸ் அணியினர் அறுவர் கொண்ட ஆட்டம் ஆடும் பாங்கில் வீண் அவசரம் காட்டியமை குறைபாடாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் பல்வேறு வகை மட்டுப்படுத்தப்பட்ட வகை ஆட்டங்கள் ஆடப்படுகின்றன. எனவே

## விளையாட்டு

கள், 6நான்குகள் கொண்ட அரைச் சதத்தைப் பெற்றுக் கொண்டார். ராஜ்குமார் தம் பங்குக்கு 31ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார் சாப்ரா, ஆட்டமுடிவில் 7 இலக்கு இழப்பிற்கு மொத்தம் 214ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது இந்த எண்ணிக்கையையாழ் பல்கலைக்கழகம் எட்டிப்பிடிப்பது சுலபமல்ல என்ற அபிப்பிராயம் பொதுவாக நிலவியது. காரணம் ஒரு பந்துப்பரிமாற்றத்தில் பெறவேண்டிய ஓட்டத்தின் சராசரி 7க்குமேல் சென்று விட்டதாகும். ஜெயகாந்தனின் அதிரடிக்கு ஓரளவாவது தப்பிக்கொண்டவர் சிறிதரன் மட்டும்தான்: மற்றெல்லோரும் கூடிய ஓட்டங்களை விட்டுக் கொடுத்தவர்களானார்கள் சிறிகரன் 28 ஓட்டங்கள் கொடுத்து 4 இலக்குகளை

# விளையாட்டு அரங்கு

யாழ்ப்பாணத்தில் பல்வேறு வகை மட்டுப்படுத்தப்பட்ட வகை ஆட்டங்கள் ஆடப்படுகின்றன. எனவே இளம் வீரர்கள் இவற்றின் தார்ப்பரியங்களை சரியாக புரிந்து கொண்டால் அவர் தம் திறமை இன்னும் வளரும், அணிகளும் வெற்றி பெறும்.

இறுதியாக இந்த இரண்டு ஆட்டங்களும் ஓர் உயர்தன்மை கொண்டிருந்ததை யாரும் மறுக்க மாட்டார்கள். இந்த ஆட்டங்கள் பற்றி ஓர் அனுபவஸ்தர் கருத்துக் கூறும்போது ''இவ்வாட்டங்கள் இரண்டிலும் கிரிக்கெட் எனும் அற்புத ஆட்டமே வெற்றி பெற்றது'' என்றார். ★ ★

# அவுஸ்திரேலியாவின் ஒரு நாள் கிரிக்கெட் நட்சத்திர ஆட்டக்காரர் டீன் ஜோன்ஸ்

டெஸ்டில் ஆரம்பித்த கிரிக்கெட்டின் வரலாற்றில் இன்று ஒரு தின ஆட்டங்களே புகழ் வாய்ந்தவையாக உள்ளன. ஆட்ட நாளன்றே முடிவு தெரிந்து விடுதல் அசர வைக்கும் அற்புத பந்து தடுப்பு, திணறடிக்கும் பந்து வீச்சு, அழகான மட்டை வீச்சுக்கள், இவற்றிற்கும் மேலாக ரசிகர்களின் உணர்ச்சியின் உச்சக் கட்டத்திற்குக் கொண்டு செல்லல் இவையே இப்போட்டியின் சிறப்பம்சமாகும்.

இவ்வாறான ஒரு நாள் போட்டிகளில், அசத்தி வந்தவரும் சிறந்த வலதுகைத் துடுப்பாட்ட வீரரான அவுஸ்திரேலிய நட்சத்திர விளையாட்டு வீரருமாகிய டீன்ஜோன்ஸ் திடீரென எதிர்பாராத வகையில் தமது ஓய்வை அறிவித்திருக்கிறார் தென்ஆபிரிக்காவில் நடந்த ஒருதின ஆட்டங்களில் அவ்வளவு சிறப்பாக ஆடாததால் சார்ஜாவில் நடந்த ஆஸ்திரேலிய கோப்பைக்கான போட்டிகளில் டீன் ஜோன்ஸ் சேர்க்கப்படவில்லை இதுதான் ஜோன்ஸ் தமது ஓய்வை அறிவிக்க காரணம் 36 வயதாகும் டீன்ஜோன்ஸ் சில மாதங்களின் பின் மீண்டும் ஆஸ்திரேலியாவில் நடந்த தெ ஆபிரிக்காவுக்கெதிரான, நியூஸிலாந்துக்கெதிரான போட்டிகளில், ஒன்றில் 98 ஓட்டங்களையும் இன்னொன்றில் 82 ஓட்டங்களையும் குவித்து இரு ஆட்டங்களுக்குமான ''ஆட்டக்கதாநாயகன்'' விருதையும் தட்டிக்கொண்டவர் ''தொடர்ந்து ஒருதின ஆட்டங்களில் மட்டுமல்ல, டெஸ்ட் போட்டிகளிலும் ஆட ஆசை தான் சந்தர்ப்பம் கிடைக்குமென்று எதிர்பார்த்திருந்தேன் கிடைக்கவில்லை'' என்று தம் திடீர் ஓய்வுக்கு காரணம்கூறும் டீன்ஜோன்ஸ், 1987-ல் ஆஸ்திரேலியாவுக்கு உலகக் கோப்பை கிடைக்க சிறப்பாக ஒத்துழைத்தவர் முதலாம் இலக்க ஆட்டக்காரரான ஜோன்ஸ் ஒருதின ஆட்டவரலாற்றில் 5000 ரன்களுக்கு மேல்பெற்ற தோடுகூடிய ஓட்டங்களைபெற்றஒருதின ஆட்டக்காரருள் ஒருவராகவும் இருக்கிறார். ஒருதின ஆட்டங்களில் மொத்தமாக சுமார் 8 சதங்களை பெற்றுள்ள ஜோன்ஸின் ஒரு தின ஆட்டசராசரி ஏறத்தாழ 50 04 ஆகும் எல்லா வகையான பந்துகளையும் எதிர்த்தாடும் ஜோன்ஸ் ரசிகர்களுக்கு பிடித்தமானவரும் கூட 1989-90 இல் இலங்கைக்கு எதிரான ஆட்டமிழக்காத 117 ஓட்டங்கள் 1988 89-ல் நியூஸிலாந்துக்கெதிரான 108 ஓட்டங்கள் 1991 இல் நியூசிலாந்துக்கு எதிரான ஆட்டமிழக்காத 106 ஓட்டங்கள் என்பன குறிப்பிடத்தக்கன. ஒருதின ஆட்ட வரலாற்றில் 3வது விக்கெட் கூட்டுக்கான அதிகூடியரன்கள், 1985-86-ல் டீன்ஜோன்ஸ் - அலன் போர்டர் ஜோடி எடுத்த இலங்கைக்கெதிரான 242 ஓட்டங்கள் தான் அதில் ஜோன்ஸ் ஆட்டமிழக்காது 99 ஓட்டங்களைப் பெற்றார்.

சிறந்த களஆட்டக்காரருமான டீன்ஸ்ஜோன்ஸ், டெஸ்ட் ஆட்டங்களிற்தும் சளைத்தவரல்ல அவர் கடைசியான 1992 93 ல் இலங்கைக்கெதிரான டெஸ்ட் போட்டிகளில் ஆடி இரு தடவை ''ஆட்டக்கதாநாயகன்'' விருதைப்பெற்றார் முதலவது டெஸ்ட்டிலேயே பரிதாபகரமாக இலங்கைஅணி 17 ஓட்டங்களால் தோற்றபோது அப்போட்டியில் ஆஸ் அணிக்கு வெற்றியீட்டிக் கொடுத்த டீன் ஜோன்ஸே சிறந்த ஆட்டக் கதாநாயகனாகத் தெரிவானார் 1991-92 ல் இந்தியாவுக்கெதிரான டெஸ்ட் போட்டிகளை 4—0 என்ற அளவில் ஆஸ்திரேலியா வென்றபோதும் ஒரு போட்டியில் ஆட்டமிழக்காது 150 ஓட்டங்களை விளாசித்தள்ளியவர் டீன்ஜோன்ஸ், 1990 களில் பாகிஸ்தானுடனான ஒரு டெஸ்ட்டில் முதலாவது இனிங்சில் 116 ஓட்டங்களையும், இரண்டாவது இனிங்சில் ஆட்டமிழக்காது 124 ஓட்டங்களையும் குவித்து, இரு இனிங்சிலும் சதம் பெற்றவருள் ஒருவரானார். 1988-ல் நியூஸிலாந்துக்கெதிரான டெஸ்ட் ஒன்றில் டேவிட்பூன் 200 ஓட்டங்களை அடித்தபோது, அதே டெஸ்டில் 99 ஓட்டங்களை பெற்று அநியாயமாக ஆட்டமிழந்தார் ஜோன்ஸ்.

சி. சோ. பதந்தன்

1986 ல் ஜோன்ஸ் இந்தியாவில் நடந்த இந்தியாவுக்கெதிரான போட்டியில் 210 ஓட்டங்களைப்பெற்றார் அதே போட்டியில் அணித் தலைவர் பார்டரும் 168ஓட்டங்களைப் பெற்றார். ஆனால் அந்த டெஸ்ட் ஒரு அபூர்வமானதாகும் இறுதியில் இந்திய அணியின் இறுதிப் பந்தடிப்பாளரான மணீந்தர்சிங் ஒரு ஓட்டத்தை எடுத்து ஆட்டத்தை வெல்ல வேண்டிய நிலையில் இருந்தபோது, ஆஸ்திரேலியாவின் சுழற்பந்து வீச்சாளர் கிரெக் மாத்யூஸ் அந்தப் பந்தினை வீச, அதில் எல். பி. டபிள்யூ ஆகி, மணீந்தர் வெளியேற, ஆட்டம் டை (Tie)யில் முடிந்தது

டீன்ஜோன்ஸின் உயர்ந்த பட்ச ஓட்டங்கள் 216 ஆகும் போட்டார் ஜோன்ஸ் ஆக. இரு இரட்டை சதங்களை குவித்த ஜோன்ஸின் டெஸ்ட் ஆட்ட சராசரி ஏறத்தாழ 45 ஆகும் ஆஸ்திரேலியாவில் பிறந்து ஆஸ்திரேலியா



1989-ல் மேஇ தீவுகள் அணிக்கெதிராக ஆடிய போது, 16 பவுண்டரிகள் உட்பட இந்த இரட்டை சதத்தை வுக்காக ஆடிய ஜோன்ஸ் நன்கு ஆடக்கூடிய நிலையில் தம் ஓய்வை அறிவித்தது கவலைக்குரிய ஒன்றாகும்.

## 20ஆம் ஆண்டு நினைவலைகள்



**தியாகி பொன் சிவகுமாரன்**
**உரும்பிராய்**

பிறப்பு: 26 - 08 - 1950 வீரச்சாவு: 05 - 06 - 1974

"மீண்டும் பிறப்பேன் தமிழின விடுதலைக்காகப் போரிடுவேன் என் மரணத்தின் பின் ஆயிரமாயிரம் சிவகுமாரர்கள் தோன்றுவர் தமிழீழம் ஒரு நாள் மலரும்."

உன் வழியில் ஆயிரமாயிரம் புலி வீரர்கள் இன்று விடுதலைக்குப் போரிடுகின்றனர்.

இன்று எமதில்லத்தில் நடைபெறும் நினைவு நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி உறவினர்களையும், நண்பர்களையும், போராளிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உன்னை மறவா
அம்மா, உடன்பிறப்புக்கள்,
மைத்துனன், மைத்துனிகள்,
பெறாமக்கள், மருமக்கள்.

ராஜபவனம்,
உரும்பிராய் கிழக்கு.
(8477)

## 90-ம் நாள் நினைவில்-நிகழ்வில
## உள்ளம் சொரியும் கண்ணீர் அஞ்சலி



**திரு. வடிவேல் ஜெயபாலசிங்கம்**
**(திருப்பூர், மயிலிட்டி)**

திருப்பூரின் சீர் பெருக்க 14-03-1965 திருவடியின் தொண்டேற்க 07-03-1994

குடும்பத்தில் எட்டாவது குழந்தையாக இச் சகத்திலே நீ பிறந்து, வளர்ந்து வரும் வேளையிலே சிறு வயதில் தந்தையை இழந்தாய்! அன்றே பெரும் குடும்பத்தின் பொறுப்புணர்ந்தாய், உழைக்க வேண்டும் எம் குடும்ப வாழ்வு சிறக்க வேண்டும் என்ற உறுதி கொண்ட மனத்தினாய் அருங்குணத்தவனே உழைத்தாய் - பொருள் சேர்த்தாய், விதவைத் தாய்க்கு விசுவாசமான மகனாகவும், உடன்பிறப்புக்களுக்கு நல் வாழ்வின் வழிகாட்டியாகவும், மொத்தத்தில உன் பெரும் குடும்பம் இடம் பெயர்விலும் சீராடும் சிறப்போடும் வாழ வழி வகுத்த உத்தமனே! ஜெயா !!

ஜெயா என்ற பெயர் திருப்பூரின் வளர்ச்சியிலும், உயர்ச்சியிலும் இரண்டறக் கலந்தது - இணைந்தது சொந்தம் பந்தம் என்ற குறுகிய வட்டத்தில் வாழாது தான் வாழ்ந்த திருப்பூரின் சிறப்பான வளர்ச்சிக்கு உயர்ச்சிக்கு முற்றும் முழுதாக தன்னை அர்ப்பணித்த ஊர் போற்றும் உயர்ந்த மகன்.

ஜெயாவின் 90-ம் நாள் நிகழ்வில்
எம் கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

திருப்பூர் ஒன்றியம்,
மயிலிட்டி.

(8475)

## மெய்வல்லுநர் போட்டி

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் வருடாந்த இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப்போட்டிகள் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அதிபர் திரு க. நடராசா தலைமையில் நடைபெற்றது. கல்லூரியின் பழைய மாணவர் பட்டயக்கணக்காளர் திரு. அ. சோமசுந்தரம் பிள்ளை இவ் விளையாட்டுப் போட்டியிலும் பரிசளிப்பு விழாவிலும் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டார்.

## நரேமா பயணிகளுக்கு

நரோமா கப்பல் மூலம் இம் மாத முதல் வாரத்திற்கும் வரும் 7 ஆம் திகதிக்கும் பிரயாணம் செய்வதற்கு பணம் செலுத்தியவர்களை வரும் 7 ஆம் திகதி காலை 11 00 மணிக்கு பருத்தித்துறை இறங்குதுறைக்கு தவறாது சமுகமளிக்கும்படி மேலதிக அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். (சி) (தி)

## திருட்டு முயற்சி முறியடிப்பு

கூட்டுறவுச் சங்கக்கிளை ஒன்றில் நடைபெற்ற கொள்ளை முயற்சி அயலவரின் சாதுரியமான செயற்பாட்டினால் முறியடிக்கப்பட்டது.

அண்மையில் நடந்த இச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது மானிப்பாயில் இயங்கி வரும் பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளையின் கூரைசீற் நள்ளிரவு நேரம் திருடரினால் பிரிக்கப்பட்டு கொள்ளை முயற்சி நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை லக்ஸ்பிறேயின் தவறி வீழ்ந்த சத்தத்தில் விழித்துக் கொண்ட அயலவர் சாதுரியமாக கள்வரைப்பிடிக்க முயற்சிக்கையில், திருடிய பொருட்களான சன்லைட், லக்ஸ்பிறே போன்றவற்றை கைவிட்டு திருடர் தப்பித்துக் கொண்டதாகவும், இச் சம்பவம்பற்றி காவல் துறையினரிடம் புகாரிடப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (41)


## மாணவர் எழுச்சி நாள்

**யூன் - 5**

"மாணவர் வலுதான் ஆற்றல் மிகு வலு
எங்கள் அறிவும் ஆற்றலும் அன்னை
நாட்டிற்கே"

பணிப்பாளர், பணியாளர்,
அங்கத்தவர்கள்.

பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்

(8414) பளை.

## தாய்மார்களுக்கு நற்செய்தி
## பளிச்சிடும் வெண்மையை
## தந்திடும் ஒரே நீலம்

**றோயல் நீலம்**

- பள்ளிக் குழந்தைகளின் ஆடைகளுக்கு பளிச்சிடும் வெண்மையை தருவது
  **றோயல் நீலம்**
- வீட்டுத் தலைவன் விரும்பி வாங்கி வருவது
  **றோயல் நீலம்**
- ஆடைகளுக்கு எந்தவித ஊறும் விளைவிக்காமல் பட்டென பளிச்சிடுவது,
  **றோயல் நீலம் ஒன்று தான்**

தமிழீழத்தில் உத்தரவாதம் பெற்றது
றோயல் நீலம் என்பது பெருமைக்குரியது.

**சில்லறை விலை ரூ. 6.50 மட்டுமே**

சந்தைப்படுத்துவோர்:

**றோயல் இன்டஸ்ரீஸ்,**
பொன்னையா ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.

(சி-9597)


## 45ஆம் நாள் நினைவலைகள்





யாழ் மாவட்டத்தில் 22-04-1994 அன்று ஏற்பட்ட தற்செயலான வெடிவிபத்தில் எமைப் பிரிந்த

| | | |
|---|---|---|
| | | அமரர் |
| **2-ம் லெப். வேலவன்** | **2-ம் லெப். இசையமுதன்** (மனோச்) | **செல்வன் வ. ஜெகதீஸ்வரன்** (ஆனந்) |
| தாயின் மடியில் 25-10-1974 | தாயின் மடியில் 06-06-1977 | தாயின் மடியில் 03-09-1972 |

பைந்தமிழ் இனம் காக்க பறந்தோடி வந்த,
இளந்தமிழ் வேங்கைகளே உங்கள் உணர்வுகள் இங்கு
உரமாகிப் போனதோ வேங்கையுடன் வேங்கையாய்
இணைந்து விட்ட தமிழ் வீர மறவா! உன் சேவை
இங்கு நிலை பெற்றுப் போனதே ஆதலினால் உங்கள்
மூச்சுக்கள் உரத்து ஒலிக்கிறதோ?
வீர மறவர்களே இனிமேலும் இறக்காது உங்கள் பணிகள்
ஓய்வின்றித் தொடரும்! வெல்லும்! ஒரு தமிழீழம் மலரும்!!
தமிழ்மண் சிரிக்கும்!!! உங்கள் கனவுகள் நிறைவேறும்!!!

\- போராளி நண்பர்கள்

(8478)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இளை நூலகம்.

## சிந்தனைக்கு

கல்விக்கு ஒரே ஒரு குறிக்கோள்தான் இருக்க முடியும் வீரம் ஊட்டுவதே அது.

ஆல்ஃபிரெட் ஆட்லர்

ஈழநாதம்

11, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 05-06-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05

# மாணவர் சமுதாயம் சமூகத்தின் முதுகெலும்பு

தமிழீழ மாணவ எழுச்சி நாளாக இன்றைய தினம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இம் மாணவ எழுச்சி தினத்தை உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பதற்கென ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன

மாணவர் சமுதாயமே எமது இனத்தின் முதுகெலும்பு. எமது தேசத்தின் எதிர்காலச் சிற்பிகளும் அவர்களே. எமது சமூகத்தின் வாழ்வும், வளமும் அவர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. இந்தவகையில், மாணவ சமுதாயத்தின் பங்கும், பணியும் பாரியதென்பதோடு, பொறுப்பு மிக்கதுமாகும்.

இந்த வகையில், கடந்த காலத்திலும் எமது மாணவ சமுதாயம் பொறுப்புடன் நடந்துகொண்டுள்ளது என்பதில் சந்தேகமில்லை, தமிழர் சமுதாயம் இன்று தனது விடுதலைப்போராட்டத்தில் இன்றைய உயர் நிலையை அடைந்தமைக்கு இம்மாணவர்கள் பெரும் பங்களிப்பும் காரணமாகும்.

கடந்த காலத்தில் தமிழ் மக்கள்மீது சிங்களப் பேரினவாதம் பல வழிகளில் ஒடுக்குமுறைகளைத் திணித்தது. இவற்றிற்கு எதிர்ப்புக்குரல்கள் பலமாகவே எழுந்ததாயினும் அவற்றிற்கெதிரான தொடர் போராட்டங்கள் நடைபெறவில்லை என்றே கூறவேண்டும். தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவந்தபோதும், குடியேற்றங்கள் மூலம் தமிழர் தாயகம் ஆக்கிரமிக்கப்பட்டபோதும் எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டதாயினும் அவற்றிற்கெதிரான போராட்டம் ஒரு கட்டத்துடன் நின்று விட்டன.

ஆனால், தமிழ் மாணவ சமுதாயத்திற்கு எதிராக சிங்களப் பேரினவாதம் தரப்படுத்தல் என்ற அடக்குமுறையைக் கொண்டு வந்தபோதே சிங்கள அரசிற்கு எதிரான தொடர் போராட்டமும், அதேசமயம் போராட்ட வடிவத்திலும் மாற்றம் வந்தது. இதற்கு அன்றைய மாணவ சமுதாயம் நேரடியாக போராட்டக்களத்தில் இறங்கியமையே காரணமாகும்.

அன்று மாணவ- இளையசமுதாயம் தொடங்கிய போ

**எமது**

காட்டிவரும் ஏற்றத்தாழ்வுகள்

- தற்போதைய பொருளாதாரத் தடையினால் மாணவர்களின் கற்கைக்குத் தேவையான கொப்பி, எழுதுதாள், எழுதுகோல் போன்றவை கிடைக்காமை
- பாடசாலைக்கு வேண்டிய கரும்பலகை மை, வெண்கட்டிகள், தேர்வுகளுக்கு வேண்டிய எழுதுதாள்கள், கல்லச்சுத்தாள், கல்லச்சு மை, ஸ்ரென்சில் போன்றவற்றுக்கான தடை,
- மாணவர்கள் அறிவியற் பாடங்களை எளிதாகப் புரிந்து கொள்வதற்காக வீடியோ கசட்டுக்கள், நூல்கள், உபகரணங்களுக்குத் தொடர்ந்து வரும் தடை.
- தமிழ்ப்பகுதிப்பாடசாலைகளுக்கான கட்டடப்பணி முற்றாக நிறுத்தப்பட்டதோடு மட்டுமின்றி கண்மூடித்தனமான குண்டுவீச்சு, எறிகணைத் தாக்குதலினால் ஏற்கனவே இருந்து வரும் கட்டடங்களும் அழிக்கப்பட்டு வருவமை.
- மாணவர்கள் வீட்டில் கற்பதற்குத் தேவையான மின்சாரம், எரிபொருள் இன்மை
- பாடசாலை செல்வதற்கான போக்குவரத்து வாய்ப்புக்கள் (வசதிகள்) இல்லாததோடு மிதிவண்டிகளுக்கும் ஏற்படுத்தப்பட்டுள்ள தட்டுப்பாடு.
- மாணவர்களுக்கான ஆய்வுகூட இரசாயனப் பொருள்கள் அறவே நிறுத்தப்பட்டமை
- உரிய காலங்களில்பொதுத் தேர்வுகள், செயன்முறைத் தேர்வுகளை நடத்தாது இழுத்தடிப்பது.
- தேர்வு காலங்களில் திட்டமிட்ட முறையில் பாடசாலைகள் மீதும் பாடசாலைச் சுற்றாடலிலும் மேற்கொள்ளப்பட்டுவரும் வான் தாக்குதல்கள்.

இவைபோன்ற எண்ணிலங்காத இடர்களும், தடைகளும் தமிழீழ மாணவர்களின் எதிர்காலத்தையே அழித்துச் சிதைப்பதற்காகச் சிங்கள அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதுமட்டுமின்றி, தமிழ் மாணவர்களின் உயிருக்கும் யாரும் உறுதி கூறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அண்மைக்காலக் குண்டு வீச்சினால் பாடசாலைகளுக்குச் செல்லும் வழிகளிலும் வீடுகளிலும் என பல மாணவர்கள் கொல்லப்பட்டு வருகின்றனர் தமிழீழ மாணவர்கள் கல்வி கற்பதற்கு மட்டுமன்றி உயிர்வாழ்வதற்கே போராட வேண்டிய கட்டாயத்திலிருக்கிறார்கள்

மாணவர்களுக்கெதிரான சிங்களப் பேரினவாதிகளின்

விடுதலைப் போராட்டங்கள், கிளர்ச்சிகள், புரட்சிகள் நடைபெறும் இடங்களிலெல்லாம் மாணவர்களது கல்வி தடைப்படுவது இயல்பானதே. ஆயினும் தமிழீழத்தைப் பொறுத்த வரை விடுதலைப் போராட்டம் வீறோடு நடைபெற்று உலகின்பார்வையைப் பெறும் உச்சநிலையை அடைந்திருக்கும் போதும் தலைவரது வழிகாட்டுதலுடன் விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழ் மாணவர்களது கல்வி தடையின்றித் தொடர தனியான வேலைத்திட்டங்களை வகுத்து, அமைப்புக்களை ஏற்படுத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அதனால்தான் இன எதிரிகள் கூட ''தமிழீழத்தில் சிங்களப் பகுதியை விட சிறப்பாக கல்விப் பணி நடைபெறுகிறது'' என்று மூக்கில்விரலை வைத்து வியக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

''காலத்தே பயிர் செய்'' என்ற பழமொழிக் கேற்ப மாணவப்பருவத்தே கல்வியில் கூடுதல் நாட்டமும் விழிப்பும் கொண்டிருக்க வேண்டும். ''மாணவர்கள் அரசியலைத் தெரிந்து வைத்திருந்தால் போதுமானது; அரசியலில் ஈடுபடுவது தேவையற்றது'' என்பது இயல்பான நிலைமைகளில் உலகம் முழுவதிலும் இருக்கும் மாணவர்களுக்குப் பொருத்தமான கருத்தாகும்.

ஆயினும், தமிழீழத்தைப் பொறுத்தவரை மாணவர்களது கல்வியே அரசியலாக்கப்பட்டுள்ளது. தமிழ் மாணவர்களது கல்வித் தகைமை வளர்ச்சியடைய விடாது தடுக்கப்படுவது மட்டுமன்றி கல்வித் தகைமையைத் தாழ்த்தி அழித்துவிடும்நோக்கோடு திட்டமிட்ட இன ஒழிப்பு நடவடிக்கையில் இறங்கி சிங்கள அரசே தமிழ் மாணவர்களது கல்வியை அரசியலாக்கும் போது, தமிழ் மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதற்கும் வாழ்வை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் போராடியே ஆகவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந் நிலையில் இடைவிடாது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றபோராட்ட சூழலில் இருந்து கொண்டு. தமக்கெதிரான தடைகளையும் இடர்களையும் எதிர்கொண்டு வரும் தமிழீழ மாணவர்கள், தமது இனம், மொழி, நாடு பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வரும் நிலையில் அந் நெருக்கடிகளை தகர்த்தெறிவதற்கான விடுதலைப் போராட்டம் வீறோடு நடைபெற்றுக் கொண்டிருக்கையில் அப்போராட்டத்துக்குத் துணை

## மேசை உப்பு உற்பத்தி

அயடீன் கலந்த சுத்தமான மேசை உப்பு உற்பத்தியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவன கைத்தொழில் பகுதியின் உப்பு உற்பத்தி நிறுவனத்தினர் தயாரித்து வருகின்றனர்.

இவ் உப்பு தமிழீழ தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தினால் சுகாதாரத்திற்கு ஏற்றது என சிபார்சு செய்யப்பட்டுள்ளது!

பொலித்தீன் பைகளில் அடைக்கப்பட்டு விற்பனைக்கு வந்துள்ள இவ்வுப்பை திறந்தபடி வைப்பது அதன் அயடீன் தன்மையை இழக்கச் செய்துவிடும் என்பதால் இதனை போத்தலில் இட்டு இறுக மூடி சூரிய ஒளி படாதவாறு வைத்து பாவிக்கும்படி உப்பு உற்பத்தி நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்

## ஏற்று நீர்ப்பாசனம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிளிநொச்சிக் கோட்ட சக்திப் பகுதியினரால் வடிவமைக்கப்பட்ட மூன்று ஏற்று நீர்ப்பாசன வசதிகள் கிருஷ்ணபுரத்தில் இரண்டும் கனகபுரத்தில் ஒன்றுமாக, விவசாயத்தில் ஊக்கமுள்ள வறுமைக்கோட்டுக்குட்பட்ட மூன்று குடும்பங்களுக்குச் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த ஏற்று நீர்ப்பாசன வசதிகளைப் பயன்படுத்திச் செய்யப்பட்டு வரும் பயிர்ச் செய்கை நல்ல பயனைக் கொடுத்து வருகிறது இந்த ஏற்று நீர்ப்பாசன வசதிகளை மேலும் விரிவுபடுத்த சக்திப் பகுதி கிளிநொச்சிக் கோட்டத்துடன் இணைந்து நடவடிக்கை எடுத்து வருகின்றது.

## வீதி நாடகம்

(தொல்புரம்)

மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பினர் வீதி நாடகங்களை நடாத்தி வருகின்றனர்.

சிறிலங்கா அரசினால் கல்விக்கு இழைக்கப்படும் அநீதிகளையும், இன்றைய மாணவர்கள் நாளைய நாயகர்கள் என்பதனையும், தமிழ் மக்களுக்கு எந்த வகையில் கல்வி ஒடுக்கப்படுகிறது என்பதனையும் இந்த வீதி நாடகங்கள் மூலம் விளக்கி வருவதை யாழ் நகரின் பிரதான இடங்களில் அவதானிக்க முடிந்தது.

(41)

## கொடிவாரம்

சர்வதேச சென் ஜோண்

## நாளை வருவான் ஒரு மாணவன்

''வடக்கில் என்ன வளமாயிருக்கு
தெற்கு கப்பல் செல்லா விட்டால்
மண்ணைத்தானே தின்ன வேண்டும்''
ஆள்பதி நாயகம் அறைந்த கூற்றை
மாற்றி அமைத்து வளத்தைப் பெருக்க
நாளை வருவான் ஒரு மாணவன்

மழையைக் கண்டால் வெள்ளம் என்பார்
வெயிலைக் கண்டால் வரட்சி என்பார்
எரிபொருள் இன்றி இயங்கா தென்று
அடுப்பெரிக்கவும் வகை தெரியாதிருப்பார்
இயற்கை கொண்டு வளத்தைப் பெருக்க
நாளை வருவான் ஒரு மாணவன்

குளத்தைப் பெருக்கி வளத்தைத் தருவான்
வெயிலைக் கொண்டு மின்கலம் செய்வான்
மனிதக் கழிவை எரிவாயு வாக்கி
அடுப்பெரிக்கவும் வழிவகை செய்வான்
காற்றின் சக்தியை தன்வசமாக்கி
ஆலைகள் யாவும் இயங்கிட வைத்து
சூழல் சுத்தம் தொடரும் வழியில்
நாளை வருவான் ஒரு மாணவன்

யுத்தம் என்றொரு சத்தமின்றி
இயந்திர மனிதன் குண்டுடன் செல்வான்
சுந்தர வானில் குண்டுகள் போடும்
குண்டுகள் தாங்கும் இயந்திரம் செய்வான்
குண்டுகள் போடும் அந்நியன் விமானங்கள்
ஒன்றுடன் ஒன்று மோதிட வைக்க
நாளை வருவான் ஒரு மாணவன்

லோ. கமலவதனி
ஆண்டு 10c,
யா/இந்துமகளிர் கல்லூரி.

## உயிர்த் துடிப்புக்கள்

மாணவர்கள்..... .........
மாபெரும் உலகைக் கட்டி
எழுப்பும் முன்

கட்டப்பட்ட புதிய மாவிலைத் தோரணங்கள்

புது யுகப் பிறப்பிற்கு
நிலவாக வடிவெடுக்கும்
வளர் பிறைகள்!

விடியா வேளையிலும்
விடி விளக்காய்
ஒளிரும் எம் தேசத்தின்
சுடர் ஒளிகள்

தேச நாளத்தில் பாய்ந்தோடும்
உயிர்த் துடிப்புகள்!
மின் மினிப் பறவைகள்
மேகக் கிளைகளில்
பொன்மனக் கூடுகளில் - புதுப்பித்து தந்த
நாட்டின் கண்மணிக் குழந்தைகள்

இருண்ட இரவுகளில்
அறிவின் ஒளியையே
துணையாகக் கொண்டு - எழுதும்
மாணவனின் துயரங்களை
பகலின் ஒளியில் படித்து
பார்ப்பவர்களால்
புரிந்து கொள்ள முடியாது

எம் பகல்களே இரவாக - மாறிக் கண்ணீர்
சிந்தும் போது - நாம்
இரவுகளுக்கு என்ன
மறுமொழியைக் கூறுவது?

டக்களத்தில் இறங்கியமையே காரணமாகும்.

அன்று மாணவ- இளையசமுதாயம் தொடங்கிய போராட்டம் இன்று ஒரு பெரும் விடுதலைப் போராட்டமாக மாறியுள்ளது. இதற்குத் தொடர்ந்தும் மாணவ சமுதாயம் ஆற்றிய சேவைகளும், அர்ப்பணிப்புகளும் நிறையவே உள்ளன. ஒருவகையில் கூறுவதானால், தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் உந்து சக்தியாக விளங்கியவர்கள் இவர்கள் என்றே கூறலாம்,

இதேசமயம் மாணவ சமுதாயம் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு புரிந்த தியாகங்கள் ஒருவகையில் தமிழீழ விடுதலைக்கு ஆற்றியபங்களிப்பு ஆயினும், மறுவளமாக அது அவர்களின் கடமை என்றே கூறவேண்டும். ஏனெனில், எதிர்காலத்தில் தமிழ்இனத்தின் சுமைகளைத் தோள்களில் தாங்க வேண்டிய இவர்கள் அப்பொழுதே சுமைகளைக் குறைத்துக் கொள்ளவும் தமது இனத்தின் வாழ்விற்கு அர்ப்பணிப்பு செய்வதும் அவசியமானதொன்றே ஆகும்.

ஆனால், மாணவ சமுதாயத்தின் பொறுப்புக்கள் இன்னமும் முடிந்து விடவில்லை எமது தற்போதைய மாணவ சமுதாயத்தின் முன்னும் பெரும் பொறுப்புக்கள் உள்ளன. எமது விடுதலைப் போராட்டம் கணிசமான அளவில் முன்னேற்றம் கண்டுள்ள நிலையில் அதனை முன்னெடுத்துச் செல்ல வேண்டியதும் மாணவ சமுதாயத்தின் கைகளிலேயே உள்ளது, அவ்வாறு முன்னெடுத்துச் செல்லும்போதே தமிழரின் விடுதலைப் போராட்டம் உரிய இலக்கை எட்ட முடியும்.

இவற்றோடு மேலும் பல சமூக, பொருளாதார கடமைகளும் இவர்களுக்கு உண்டு. மேம்பாடான பொருளாதார சமூகமாக எமது எதிர்காலச் சமுதாயத்தை உருவாக்குவதும், எமது சமுதாயத்தில் காணப்படும் மூடநம்பிக்கைகளையும், பிற்போக்குத் தனங்களையும் ஒழித்து சமூக நீதியையும், பாகுபாடு அற்ற ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குவதும் இவர்களின் பொறுப்பாகும்.

இதற்கு தமிழ் மாணவர்கள் மத்தியில் மண் பற்றும் விடுதலை உணர்வும் அவசியம் என்பதோடு அர்ப்பணிப்புடன் கூடிய சமூக விழிப்புணர்ச்சியும் தேவையானதாகும் விடுதலை உணர்வும் மண்பற்றும் அதிகம் கொண்ட இனங்களே உலகில் முன்னேற்றங் கண்டுள்ளன என்பதே யதார்த்த நிலையாகும் இதனை இவ் எழுச்சி தினத்தில் மாணவ சமுதாயம் மனதில் கொள்வதோடு எதிர்கால சமுதாயத்தை வழி நடத்த தயாராக வேண்டும்.

கட்டாயத்திலிருக்கிறார்கள்

மாணவர்களுக்கெதிரான சிங்களப் பேரினவாதிகளின் இந்தச் செயற்பாடுகள் தமிழினத்தின் அடித்தளத்தையே அழித்தொழிக்கும் நடவடிக்கையேயாகும்.

ஆயினும் பல்வேறு நெருக்கடிகளுக்கிடையேயும் இடர்கள் தடைகளை எதிர்கொண்டுதான் எமது மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்கின்றனர்.

உலகில் வீரமும், ஆற்றலும் ஆளுமையும் மிக்க இனமாக, பல நாடுகளைக் கொண்டிருந்த இனமாகத் திகழ்ந்த தமிழினம் இன்று தமக்கென உலகில் ஒரு நாடுகூட இன்றி, வாழுமிடங்களில் எல்லாம் மாற்றாருக்கு மண்டியிட்டு அடிமை இனமாக வாழுகின்ற நிலை ஏற்பட்டமைக்கு தமிழரின் கல்வி நிலை தளர்ந்து வீழ்ச்சியுற்றுள்ளதுதான் முதன்மையான காரணமாகும்

கல்வியின் இன்றியமையாமையை நன்குணர்ந்தமையாற்றான் எமது தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் விடுதலைப் போராட்டத்திற்குப் போராளிகள் தேவையாக நிலையிலும் பல போராளிகளைக் கொண்டு கல்விக் கழகம் என்றும், விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு என்றும், சமூக மேம்பாட்டுப் பிரிவு என்றும் கல்வியை மேம்படுத்துவதற்கு பல அமைப்புக்களை ஏற்படுத்தி தமிழ் மாணவர்கள் எதிர்கொள்ளும் கல்வித் தடைகளைத் தகர்த்தெறிய திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தி வருகின்றார்.

தமிழீழத்தில் எதிர் காலத்தில் கல்வியற்றவர்கள் என்று யாரும் இருக்கக் கூடாதென்பதற்காக தாய் தந்தையரை இழந்து குடியிருந்த வீடுகள் உடைமைகளை இழந்து கல்வியைத் தொடங்கவோ தொடரவோ வாய்ப்பற்றிருக்கும் மாணவர்களுக்கு கல்வி வாய்ப்பை ஏற்படுத்த பல அமைப்புக்களை ஏற்படுத்தி வருகின்றார்

டம் வீறோடு நடைபெற்றுக் கொண்டிருக்கையில் அப்போராட்டத்துக்குத் துணையாக தம்மாலான பங்களிப்பைச் செய்ய வேண்டியது மாணவர்களது தலையான கடமையாகும் ஏனெனில் எதிர்காலம் மாணவர் சமுதாயத்தினுடையதே. இன்று நாம் எதிர்நோக்கும் தாக்கங்களையோ விடுதலையின் விளைவுகளையோ நாளை ஏற்க இருப்பவர்கள் இன்றைய இளைஞர்களும் மாணவர்களுமே

மாணவர் எழுச்சி நாளைக் கொண்டாடுகின்ற இன்றைய நாளில், மாணவர்கள் சமுதாயத்திற்குப் பயன்படத்தக்கவகையில் சமுதாயம் போற்றுகின்ற வகையில் முழுமையான மனிதர்களாக ஆக வேண்டும் என்ற உறுதியை எடுத்துக்கொள்ள வேண்டும்.

நாட்டுப்பற்றும் மொழிப் பற்றும் இனப்பற்றும் மிக்கவர்களாக இருப்பதுடன் பாடசாலைப்பற்றும்கொண்டவர்களாக மாணவர்கள் திகழ வேண்டும் பாடசாலையில் ஆசிரியர்களுக்கும், அதிபர்களுக்கும் உரிய மதிப்பை வழங்க வேண்டும்.

வகுப்பறைக் கல்வியில் ஆர்வத்தோடும் அக்கறையோடும் ஈடுபட்டு ஆற்றலையும்திறமையையும் பெறுவதோடு உலக அறிவையும், கலைஇலக்கியம், உடற்பயிற்சி போன்ற புறநிலைக் கல்வியையும் நிறைவாகப் பெற்று, பொதுநலப் பணிகளில் ஈடுபாடு கொண்ட முழு மனிதர்களாக ஆகவேண்டும் என மாணவரமைப்பு வாழ்த்துவதோடு தமிழீழ மாணவர்களதுகல்விநிலையை மேம்படுத்துவதிலும் அவர்களுக்குத் தோள் கொடுக்கும் தோழமை அமைப்பாகச் செயற்படும் என்றும் உறுதி கூறுகின்றோம்.

## கொடிவாரம்

சர்வதேச சென் ஜோண் அம்புலன்ஸ் தினத்தை முன்னிட்டு யாழ். பிரதேச சென் ஜோண் அம்புலன்ஸ் சங்கமும் படையும் இன்று 05 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை கொடிவாரம் ஒன்றினை நடாத்துகின்றது.

## உலக சூழல் தினம்

(யாழ்ப்பாணம்)

உலக சூழல் சுகாதார தினம் யாழ். மாநகராட்சி மன்றத்தினால் இன்று பிற்பகல் 2 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் கொண்டாடப்படவுள்ளது

யாழ் மாநகரசபை ஆணையாளர் தலைமையில் நடைபெற இருக்கும் இந் நிகழ்வில் கவி அரங்கு, தாளலயம், உரை அரங்கு, நாடகம் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன

## மேலும்

ஐ தே கவை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன் தான் இம் முடிவை எடுத்ததாகவும் தான் தொடர்ந்து தனது முழுமையான ஆதரவை ஐ. தே. கவுக்கு வழங்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்

இதேவேளை ஐக்கிய தேசிய கட்சியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களான சிறிசேன, எலைக்றோபசன் ஆகியோர் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவி இராஜினாமாவை அடுத்த வாரம் பாராளுமன்றம் கூடும்போது சமர்ப்பிப்பார்கள் என தெரியவந்துள்ளது

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள பாராளுமன்றக் கூட்டத்தில் தமது இராஜினாமா கடிதத்தை சமர்ப்பித்து விட்டு உரையாற்றுவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மறுமொழியைக் கூறுவது?

பன்னீர் தெளித்து
வந்ததல்ல எம் கல்வி
செந்நீர் - துளித்து
அன்னை கண்ணீர் வடித்து
வளர்ந்த கல்வி

அதோ!
அந்த தெருவில் அணைபத்
துடிக்கும் விளக்குகளில் தான்
உள்ளத்துடிப்புடன் - எம்
அணையா அறிவலைகளும்
மனக் குமுறல்களும் பொங்கிய இடம்

புத்தன் ஞானம் - பெற்றது
என்னவோ - போதி மரத்தடியில் தான்
-ஆனால்
எமக்கு மானம் பிறந்தது - இந்த
ஒளிக் கம்பங்களின் கீழ்த் தான்
கல்விக் கோட்டைக்கு
வெகு தூரம் - நடந்து
செல்ல வேண்டியிருக்கின்றது!
- நடப்பது எமது -
கால்கள் - அல்ல - நாம் கல்வியின்
மேல் கொண்ட காதல்.

அ. மாறன்
யா/ புனிதர் சாள்ஸ் ம வி

## பலாலி முகாம் சிப்பாய் நஞ்சருந்தி தற்கொலை

கடந்த 7 வருடகாலமாக பலாலிஆனையிறவு இராணுவ முகாமில் கடமையாற்றிய இராணுவசிப்பாய்ஒருவர்முகாமிலிருந்து தப்பியோடி தமது வீட்டிற்கு வந்து சாராயத்தில் விஷத்தை கலந்து அதை அருந்தி தற்கொலை செய்து கொண்டுள்ளார்

ரூபசிங்க ஆராச்சிகே ஜகத் கீர்த்தி விஜேதுங்க பெரேரா (29) என்பவரே மரணமடைந்தவராவார் இவரின் மரண விசாரணையின் போது சாட்சியமளித்த இவரின் சகோதரி எனது தம்பி கடந்த 7 வருடங்களாக பலாலி முகாமில் கடமையாற்றி வந்தார். தம்மால் இராணுவத்தில் வேலை செய்ய முடியாததால் தாம் தப்பிவந்ததாக அவர் எம்மிடம் கூறினார் தாம் இனி அங்கு செல்வதில்லை எனவும் கூறினார். இதற்கிடையில் பொலிசார் இருதடவை அவரைத்தேடிவந்த போது அவர் மறைந்து விட்டார். தாம் கைது செய்யப்பட்டால் என்ன தண்டனை கிடைக்கும் என்பதை அவர் அறிந்திருந்தார்.

நான் சம்பவதினம் வெளியில் சென்று விட்டு திரும்பிய வேளை அவர் சாராயத்தில் விஷத்தை கலந்து குடித்திறந்தார். விழுந்து கிடந்த அவரின் அருகில் சாராயமும், விஷமருந்து போத்தலும் கிடக்கக் காணப்பட்டது எனக் கூறினார்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.



# கோட்டங்கள் தோறும் மாணவர் எழுச்சி நிகழ்வுகள்

சண்டிலிப்பாய் கல்விக்கோட்ட பாடசாலைகளின் மாணவர் எழுச்சி விழாவும், தமிழ் மொழி கலைத்திறன் போட்டிகளின் பரிசளிப்பு வைபவமும் இன்று பிற்பகல் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி றெ. இருதயநாதன் தலைமையில்நடைபெறவுள்ள மேற்படி விழாவில் தமிழ்கல்வி மேம்பாட்டுப்பேரவைத் தலைவர் அருட்திரு. பிரான்சிஸ் யோசப் அடிகளார் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (41)

ஃ ஃ ஃ

வேலணை, ஊர்காவற்றுறை கல்விக்கோட்டங்கள் நடாத்தும் 'மாணவர் எழுச்சி நாள் விழா' இன்று பிற்பகல் 2.30 மணிக்கு சுண்டிக்குழி சென் ஜோன்ஸ் அக்கடமியில் மேற்படி கோட்டங்களின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. நா. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. ந. இன்பன், சிறப்பு விருந்தினர்களாக மேற்படி கோட்டங்களின் உதவிக்கல்விப் பணிப்பாளர்களான திரு. சி. நடேசபிள்ளை, திரு. அ. கனகசுந்தரம் மாணவர் அமைப்பின் தீவகக் கோட்டப் பொறுப்பாளர்களான திரு. அ. நீ. ஒப்பிலாமணி, செல்வி மா. வினோ ஆகியோர் கலந்து கொள்வார்கள் சிறப்புரைகளுடன் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (22)

ஃ ஃ ஃ

(தென்மராட்சி)

தென்மராட்சிக்கல்விக் கோட்டத்தில் மாணவர் எழுச்சி நாள் இன்று யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் தென்மராட்சிக்கல்விக் கோட்டப்பிரதிக்கல்விப்பணிப்பாளர் திருமதி புஸ்பாகணேசலிங்கம் தலைமையில் பிற். பகல் 1.30 மணிக்கு இடம்பெறும்

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் திரு. பு. சுந்தரம்பிள்ளை சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கோட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. கலைவாணனும் தென்மராட்சி மகளிர் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி கலைமதியும் தென்மராட்சி மகளிர் அமைப்பு துணைப் பொறுப்பாளர் செல்வி சாந்தி தென்மராட்சி மாணவர் அமைப்பு பொறுப்பாளர் எழிலனும் கௌரவ விருந்தினராக முன்னாள் நகரசபை செயலாளர் திரு. த. நவரத்தினராசா அவர்களும் தற்போதைய நகரசபை செயலாளர் திரு. சி. நடராசா அவர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். முதலில் எழுச்சி ஊர்வலம் யா/ றிபேக்கல்லூரியில் இருந்து யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தினை வந்தடையவுள்ளது. (86)

சங்கானைக் கல்விக் கோட்டம் நடாத்தும் மாணவர் எழுச்சிதினவிழா யா/ சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி மண்டபத்தில் இன்று பிற்பகல் 2 00 மணியளவில் சங்கானைக்கோட்ட கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. அ. தற்பரானந்தம், சங்கானை வட்டப் பொறுப்பாளர் திரு. மதி, வட்டுக்கோட்டை திருஞானசம் பந்த வித்தியாலய அதிபர் திரு. வி. சிவஞானபோதன் ஆகியோர் சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்

தமிழ்மொழி கலைத்திறன் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

கலைத்திறன் போட்டியில் முதலிடம் பெற்ற நிகழ்ச்சிகள் இவ்விழாவில் மேடையேற்றப்படும்.

யாழ் கல்விக் கோட்ட மாணவர் எழுச்சி நாள் நிகழ்ச்சிகள் யாழ் மத்திய கல்லூரியில் உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு இ. அருளானந்தம் அவர்கள் தலைமையில் பி.ப 2.00 மணிக்கு நடைபெறும் அன்றைய நிகழ்வில் தமிழீழ விடுதலைப்புலிகள் மாவீரர் பணிமனையைச் சேர்ந்த திரு. பொன்தியாகம் அவர்களும் மாணவர் அமைப்பைச்சேர்ந்த திரு. வை. செல்வம், செல்வி கௌசி அவர்களும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார்கள்.

அன்றைய தினம் தமிழ் மொழி - கலைத்திறன் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கும் ஆண்டு 5ம் பரீட்சையில் உச்சப்புள்ளி பெற்ற பதின்மருக்கும் சான்றிதழ் வழங்கிக்கௌரவிக்கப்பட்டுள்ளது.

## எழுச்சிநாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கரவெட்டிக்கல்விக் கோட்ட மாணவர் எழுச்சி நாள் நிகழ்வு இன்று பிற்பகல் 2 மணியளவில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கரவெட்டிக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் த. கலாமணி (விரிவுரையாளர்) பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார்.

இந் நிகழ்வில் ஆரம்ப நிகழ்வாக ஊர்வலம், மங்கள விளக்கேற்றல், தேசியக்கொடியேற்றல், மாணவர் எழுச்சி பண் என்பனவும் தொடர்ந்து தலைமையுரை, சிறப்புரைகள் இடம் பெறவுள்ளன. இறுதியாக கலை நிகழ்ச்சிகளும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

## பொதுச்சபை கூட்டம்

யாழ் மாவட்டத்திலுள்ள கலை ஊடக இணைய உறுப்பினர்க்கான விசேட முதலாவது பொதுச்சபைக்கூட்டம் இன்று ஞாயிறு காலை 9 30 மணிக்கு யாழ் இந்து குமார சுவாமி மண்டபத்தில் நடைபெறும்

யாழ்.

திணைக்களத்திற்கு வியாபார நடவடிக்கைகளுக்கு ஊக்கமளித்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை புறக்கணித்தமை, இடம்பெயர்ந்த பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டமை என்பன குறிப்பிடப்பட்டுள்ளன

(தி. சி)

## பாரினில் விழிப்பை உருவாக்கு சீதன ஒழிப்பை அமுலாக்கு

## கிழக்கு ஜாவா நிலநடுக்கம்; 200 பொதுமக்கள் பலி

இந்தோனேஷியாவின் கிழக்கு ஜாவாவில் நேற்று முன்தினம் காலை ஏற்பட்ட நில நடுக்கத்தினாலும் கடல் கொந்தளிப்பினாலும் 200 க்கும் மேற்பட்டவர்கள் பலியாகியுள்ளனர் பிரதான நில நடுக்கத்தின் பின் இது வரை 400 நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளன அவுஸ்ரேலியா வரை நிலநடுக்கத்தின் தாக்கம் காணப்படுகிறது.

இதேசமயம் நேற்று பாகிஸ்தானிலும் சிறியளவில் நிலநடுக்கம் காணப்பட்டது.

## வடக்கு-கிழக்கு

பான்மையாக கொண்ட பிரதேச சபைகளை உள்ளடக்கிய உத்தேச உபபிரதேச சபையின் மூன்று உறுப்பினர்களுக்கு வடக்கு - கிழக்கு இணைந்த பிராந்திய சபையில் அமைச்சர் பதவியும் இவர்களின் ஒருவருக்கு உதவி முதலமைச்சர் பதவியும் வழங்குவதும் இந்த யோசனையில் அடங்கியுள்ளது.

திகாமடுல்ல மாவட்டம் கல்முனை மாவட்டம் எனவும் அம்பாறை மாவட்டம் எனவும் பிரிக்கப்பட்டு சிங்களவர்களை பெரும்பான்மையாகக் கொண்ட அம்பாறை மாவட்டத்திலிருந்து பிராந்தியசபைக்கு தெரிவாகும் உறுப்பினர்களில் ஒருவருக்கு அமைச்சர் பதவி வழங்குவதும் யோசனைகளில் ஒன்று.

அத்துடன் முஸ்லிம்களின் கலை, கலாசார மதம் போன்றவற்றுக்கு குந்தகம் ஏற்படுத்தக்கூடிய எந்த ஓர் சட்டமூலத்தையோ, திட்டத்தையோ பிராந்திய சபை நிறைவேற்றலாகாது. அப்படி ஒரு திட்டம் பிராந்தியசபை கொண்டுவரப்பட முன் உபபிராந்திய உறுப்பினருடன் கலந்து பேசியே இறுதி முடிவு எடுக்கப்படும் என இந்த திட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

05- 06- 94

ஞாயிறு இரவு

8. 01- தியாகி சிவகுமாரன் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''இலட்சிய வேங்கை தியாகி சிவகுமாரன்''

08. 10 - உலக சுற்றாடல் தினத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சி ''சூழல் பேணுவோம்''

08. 20- மாணவர் எழுச்சி நாளைமுன்னிட்டு சிறப்பு நிகழ்ச்சி ''விடுதலைக்கு வேட்கை கொண்டனம்''

08. 30 - செய்திகள்

08. 40- தொடர்நாடகம்- ''இலங்கைமண்'' 26 ஆம்

## முகவர்கள் தேவை

தமிழீழத்தின் பிரபல சஞ்சிகையான உலக உலாவினை விநியோகம் செய்ய வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் ஆகிய பகுதிகளுக்கு விநியோக முகவர்கள் தேவையாகவுள்ளனர். தகுதிவாய்ந்தவர்கள் எதிர்வரும் 10 - 06 - 94 அன்று காலை 9-00 மணிக்கு இராசன் அச்சகம், 144, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரில் சமுகமளிக்கவும்.

இராசன் அச்சகம்,
144, அருச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-9598)

தமிழீழ
## மாணவர் எழுச்சி தினம்
சிறப்புற வாழ்த்துகிறோம்

மாணவர் சிறந்தால் தாயகம் சிறக்கும்
தாயகம் சிறந்தால் தமிழ்க்குலம் சிறக்கும்

குபேரன் களஞ்சியம்
(வீனஸ் வர்த்தக களஞ்சியம்)
358, கேணல் கிட்டு சாலை
(ஆஸ்பத்திரி வீதி)
யாழ்ப்பாணம்

(8486)

## மரண அறிவித்தல்
### சிவசிறி சோ. பாலசுந்தரக் குருக்கள்

வெய்யிலுகந்த விநாயகர் ஆலய பிரதம குருவும், ஆதீனகர்த்தாவுமாகிய சிவசிறி சோ. பாலசுந்தரக் குருக்கள் 4-6-94இல் காலமாகிவிட்டார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் செம்மணி மயானத்தில் 4 - 6 - 94 அன்று நடைபெற்றது என்பதை அறியத்தருகின்றோம்

தகவல்:

பா. விக்னேஸ்வரக் குருக்கள், (மகன்)
வெய்யிலுகந்த விநாயகர் ஆலயம்,
செம்மணி வீதி, நாயன்மார்கட்டு,
நல்லூர்.

(8487)

உ
சிவமயம்

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் பவ வருடம் வைகாசித் திங்கள் 27-ம் நாள் வெள்ளிக்கிழமை (10.06.94) காலை 06 மணி 19 நிமிடம் தொடங்கி 08 மணி 18 நிமிடம் வரையுள்ள பூர்வபக்கத்து பிரதமை திதி, சூலம் யோகம், மிருகசீரிடம் நட்சத்திரம், மிதுன லக்கினம் பொருந்திய சுபமுகூர்த்த வேளையில்

எங்கள் திருநிறைச் செல்வன் | எங்கள் திருநிறைச் செல்வி

எங்கள் திருநிறைச் செல்வன்

**தயாபரன்**

B. Sc. Eng. (Hons) University of Peradeniya
Engineer (Water Mains) Colombo Municipal Council

அவர்களை

♥

எங்கள் திருநிறைச் செல்வி

**சுகந்தினி**

B. Com, University of Jaffna

அவர்களுக்கு

திருவருள் துணைகொண்டு. வெள்ளவத்தை மயூரா பிளேஸ் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான திருமண மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்துவைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதராய் வருகைதந்து மணமக்களை வாழ்த்தியருள்வதோடு, மதிய உணவு விருந்துபசாரத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும்

**திரு. திருமதி மாணிக்கவாசகர் குடும்பத்தினர்**
(அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)
7/3 A, அலெக்சாண்டர் வீதி, வெள்ளவத்தை,
கொழும்பு - 06, தொலைபேசி: 585987

**திரு. திருமதி பாலசிங்கம் குடும்பத்தினர்**
(M. B. சுவாம்பிள்ளை அன் கோ உரிமையாளர்)
17A, மேரிஸ் வீதி, பம்பலப்பிட்டி,
கொழும்பு - 04 தொலைபேசி: 503034

(இரு வீட்டார் அழைப்பு) (சி-9596)


வேட்கை கொண்டனம்''
08. 30 - செய்திகள்
08. 40 - தொடர்நாடகம்- ''இலங்கைமண்'' 26 ஆம் அங்கம்

06 - 06 - 94
திங்கள் காலை

07. 02 - மாவீரவணக்கம்
07. 15 - மணியாரம்
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - தாயகப்பாடல்கள்


யாழ். ஸ்ரீதரில்
புரூஸ்லி நடித்த
**GAME OF DEATH**
தினசரி பி. ப. 4.00 மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு காலை 10 30 மணி
பி. ப. 4 மணி, 6 மணி
தினசரி பி.ப. 2.30 மணி காட்சி மட்டும்
ஏப்ரல் 94
ஒளிவீச்சு
(சி-9570)


(8487)

## நன்றி நவிலல்

***Arthur Ganeshapillai Joseph***

(Retd. P. T. I)

எமை விட்டு இறைவனோடு வாழச்சென்ற அன்னாரின் இறுதி ஆராதனையில் கலந்துகொண்டு ஆறுதலளித்த அனைவருக்கும், அஞ்சலிகள். அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவ மாணவிகளுக்கும், பல்வேறு வழிகளில் உதவியும் ஒத்தாசையும் வழங்கியவர்களுக்கும், ஆராதனைகளை நடத்திய குருமார்களுக்கும், சபை அங்கத்தவர்களுக்கும், சுகவீனமுற்று இருந்த வேளையில் அவரை பராமரித்த யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், தாதிமார்கள், ஊழியர்கள் மற்றும் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் அனைவருக்கும் எனது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

திருமதி செல்வதேவி ஜோசவ்
(மனைவி)

199/1, கில்னர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (8484)


சீமாட்டி ——> பெயர் மாற்றம்

# திருமாட்டி புடைவைக் கடல்

122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

தலைநகரில் முகூர்த்தப் பட்டுப்புடைவைகளின் கைராசியான முன்னோடிகள் (சி-9603)


இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது